**O.S.No.194/2018**

**Date 17.07.2025**

**வா.சா.1 காளிமுத்து**

1ம் பிரதிவாதி **குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வாங்கிய சொத்துக்களில் 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு உரிமை இருக்கிறதா என்றால் அவர்களின் சொத்து என்பதால் அவர்களுக்கு 2 முதல் 6 பிரதிவாதிகளிடம் சேர்ந்து கிரையம் வாங்கினேன். வா.சா–ஆ.2 கிரைய ஆவணத்தில் செந்தூர் பாண்டியன் 05.03.1986 தேதி கிரையம் பெறப்பட்ட விவரம் கூறப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் செந்தூர் பாண்டியனுக்கு எவ்வாறு சொத்து பாத்தியப்பட்டது என்று கூறியுள்ளார் என்றால் அவரது தகப்பனாருக்கு பாத்தியபட்டதாக கூறியுள்ளார். நான் கிரையம் பெறும் பொழுது வா.சா.ஆ.1ன் அசல் ஆவணத்தை பெற்றுக்கொண்டேனா என்றால் வாங்கவில்லை. அது நீதிமன்றத்தில் இருப்பதாக கூறினார். எந்த வழக்கில் அவ்வாறு நீதிமன்றத்தில் இருப்பதாக தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. மேற்படி நீதிமன்றத்தில் வழக்கு குறித்து நான் விசாரித்துகொள்ளவில்லை. சர்வே எண். 667/2பிக்கு மேற்கே 667/2ஏ உள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 667/2 ஏ விற்கு எனது பெயரில் தான் தற்போது வரை பட்டா உள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண். 667/2ஏ வை நான் கோட்டைத்தாய் வகையறாவிடம் இருந்து கிரையம் பெற்றேன். மேற்படி சர்வே எண். 667/2ஏ வை பொறுத்து மேற்படி கோட்டைதாய் பெயரில் வருவாய் துறை ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் தெரியாது. நான் மேற்படி கோட்டைதாயிடம் இருந்து பெற்ற கிரைய ஆவணத்தில் என்ன சர்வே எண் இருந்தது என்றால் சர்வே எண் 666/3 என்று இருந்தது. சர்வே எண். 667/2ஏ கோட்டைத்தாய் வகையறாவிற்க பாத்தியப்பட்டது அல்ல என்றாலும் சர்வே எண் 666/3 தான் கோட்டைத்தாய் வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல. அதனால் தான் மேற்படி வா.சா.ஆ.3 ஆவணத்தில் சர்வே எண். 667/2ஏ குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் சர்வே எண். 667/2ஏ கோட்டைத்தாய் வகையறாவிற்கு பாத்தியப்பட்டதாக பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் கிரையம் கொடுத்த சொத்து 667/2 ஏவில் கண்ட சொத்துக்கள் தான் என்றாலும், அது கொடுங்காலத்தேவர் வகையறாவிற்கு பாத்தியப்ட்டது என்றாலும் சரியல்ல. நான் அந்த சொத்தை கிரையம் வாங்கிவிட்டு 667/2 பிக்கு தவறான பரிகாரம் கோருகிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் கிரைய ஆவணத்தில கண்ட சங்கதிகள் கிரையம் பெற்ற 2004ம் ஆண்டிலேயே தெரியும் என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 கிரைய 2004 ல் படித்து பார்த்து தான் கிரையம் பெற்றேன். மேற்படி வா.சா.ஆ.2 அசல் ஆவணத்தை தரக்கோரி நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நான் சொத்தை கிரையம் பெற்ற காலத்தில் இருந்து தற்போது வரை எனது பெயருக்கு பட்டா மாற்றம்செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி பட்டா மாற்றம் செய்ய எப்போது நடவடிக்கை எடுத்தேன் என்றால் 2018ம் ஆண்டு பட்டா மாற்றம் செய்ய கோரி கேட்டோம். 2004 ல்கிரையம் பெற்ற சொத்திற்கு 2018 ல் தான் பட்டா மாற்றம் செய்ய நடவடிக்கை எடுத்தேனா என்றால் அதற்கு முன்னரே நடவடிக்கை எடுத்தேன். தாவா சொத்திற்கு ஏதேனும் தீர்வை ரசீதுசெலுத்தியுள்ளேனா என்றால் இல்லை. கோட்டைதாயிடம்பெற்ற நான் கிரையத்திற்கு யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் கோட்டைதாய் பெயரில் இருந்தது. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் வழக்குரையில் கூறிய சங்கதிகளை கூறாமல் பத்திரத்தை சீர்திருத்தம் செய்ய கோரிஅனுப்பியிருந்தேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பிற்கு 1ம் பிரதிவாதி தரப்பில் பதில் அறிவிப்பு அனுப்பியிருந்தார்கள் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்புக்கு பிறகு தான் எனது வழக்குரையில் புதிய சங்கதிகள் கூறியுள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி செந்தூர்பாண்டியன் தாவா சொத்தை எனக்கு கிரையம்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கொடுங்காலத்தேவரின் வாரிசுகளுடன் சேர்ந்து தாவா சொத்திற்கு மேற்கே உள்ள சொத்தை தான் கொடுங்காலத்தேவரின் வாரிசுகளுடன் சேர்ந்து கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்து கூடுதல் மதிப்பு அடைந்த நிலையில் தாவா சொத்தை தான் 1ம் பிரதிவாதி கிரையம் கொடுத்தாக பொய்யாக பிராது தாக்கல செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குரை தபசில் சொத்திற்கு மேற்கே உள்ள சொத்து கோட்டைதாய் வகையறாவிற்கு பாத்தியப்பட்ட சொத்து கிடையாது என்றால் சரியல்ல. அவ்வாறு பாத்தியப்பட்டு இருந்தால் வா.சா.ஆ.3 ஆவணத்தில் தாவா சொத்திற்கு மேற்கு உள்ள சொத்தினை

தெரிவித்திருப்பாகள் என்றால் சரியல்ல. கோட்டைத்தாய் வகையறாக்களுக்கு சர்வே எண். 667 ல் பாத்தியதை கிடையாது என்றாலும், நான் கோட்டைதாய் வகைறயாவிடம் இருந்து வேறு சொத்தை பெற்றுக்கொண்டு சர்வே எண். 667 யை உரிமை கொண்டாடுகிறோம் என்றால்ச ரியல்ல. வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிப்படைந்துள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உரிமை இல்லை என 1ம் பிரதிவாதி மறுத்துவரும் நிலையில் விளம்புகை கோராமல் வழக்கு தாக்கல் செய்தது தவறு என்றால் சரியல்ல. வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும், நான் கோரும் பரிகாரம் கிடைக்கதக்கதுஅல்ல என்றாலும் சரியல்ல.

**ம.வி இல்லை.**